# முதியோர் பராமரிப்பில் தாக்கம் செலுத்தும் காரணிகள்: முதியோர் இல்லத்தில் வாழும் முதியோருக்கும் தமது வீடுகளில் வாழும் முதியோருக்குமான ஒப்பீடு

**நித்யா வே.[115] & கருணாநிதி க.[116]**

**ஆய்வுச் சுருக்கம்**

உலகத்தில் நவீன மருத்துவ வசதிகளால் முதியோர் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வருகின்றதைப் போல, இலங்கையிலும் குறிப்பாக வடமாகாணத்திலும் முதியோர் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வருகின்றது. இலங்கையில் கடந்தகாலங்களில் இடம்பெற்ற யுத்தங்களிலான இளைஞர்களின் இடப் பெயர்வும் ஒரு மேலதிக காரணமாகும். அதிகரித்து வரும் முதியோர் எண்ணிக்கை உரிய பராமரிப்பினை வேண்டி நிற்கிறது. எனவே, அப்பராமரிப்பில் தாக்கம் செலுத்தும் காரணிகளை அறிதல் அவசியமாகும். அதன் வழி கொள்கைத் தீர்மானங்களை முன்னெடுத்தல் இலகுவாவதனால்,யாழ் மாவட்ட வடமராட்சிப் பிரதேசத்தில் வாழும் முதியோர் இல்லத்தில் வாழும் முதியோருக்கும் தமது இல்லத்தில் வாழும் முதியோருக்குமான ஒப்பீட்டு ஆய்வாக இவ்வாய்வு அமைகிறது. இங்கு முதியோர் இல்லங்களிலும் தமது வீடுகளிலும் வாழும் முதியோர்களின் பராமரிப்பு நிலையை அறிதல், இரு இடங்களிலும் முதியோர் பராமரிப்பில் தாக்கம் செலுத்தும் காரணிகளைக் கண்டறிதல், வேறுபாட்டை மதிப்பிடல், தாக்கம் செலுத்தும் காரணிகள் தொடர்பாக இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகளை மதிப்பிடல் போன்ற நோக்கங்கள் முன்வைக்கப்பட்டன. ‘கை’’ வர்க்க பரிசோதனை முடிவுகளின்படி, ஆய்வுப் பிரதேசத்தில் முதியோர் இல்லங்களில் வாழ்கின்ற முதியோர்களின் பராமரிப்பிற்கும் வீடுகளில் உள்ள முதியோர்களின் பராமரிப்பிறகும் புள்ளிவிபரவியல் ரீதியான பொருண்மை வேறுபாடு உள்ளது. ,மேலும், பிள்ளைகளின் இடப்பெயர்வு அதிகரிக்கின்ற போது முதியோர் பராமரிப்பு குறைகின்றது முதியவர்களிடம் இருக்கின்ற சொத்துக்களினளவு அதிகரிக்கின்ற போது முதியோர் பராமரிப்பு அதிகரிக்கின்றது பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்ற போது முதியோர்களின் பராமரிப்பு அதிகரித்து காணப்படுகின்றது பிள்ளைகளின் வருமானம் அதிகரிக்கின்ற போது முதியோர் பராமரிப்பு அதிகரிக்கின்றது எனும் முடிவுகளும் பெறப்பட்டன. மேற்குறித்த காரணிகள் குறித்து கருதுகோள்கள் முன்வைக்கப்பட்டு, முன்வைக்கப்பட்ட கருதுகோள்களை பரிசீலிப்பதற்காக முதியோர் இல்லத்தில் வாழும் முதியோர்களும் வீடுகளில் வாழும் முதியோர்களும் தெரிவுசெய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக வினாக்கொத்து, நேரடி அவதானம், நேர்காணல் என்பன பயன்படுத்தப்பட்டன. இவ்வாய்வு சமூக விஞ்ஞானத்துக்கான புள்ளிவிபரவியல் பொதி (SPSS) மற்றும் எக்ஸ்செல் மென் பொருட்களின் துணையுடன் விபரணப் புள்ளிவிபரவியல் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இவ்வாய்வின் முடிவுகள் முதியோர் இல்லங்களில் வாழ்கின்ற முதியோர்களை விட வீடுகளில் வாழ்கின்ற முதியோர்கள் திருப்தியுடன் வாழ்கின்றார்கள். என்ற முடிவு பெறப்பட்டதால் அது குறித்த பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**பிரதான சொற்கள்:** முதியோர் இல்லங்கள், முதியோர்களின் பராமரிப்பு, ‘கை’’ வர்க்க பரிசோதனை

To whom correspondence should be addressed: niththiyavelummayilum@gmail.com

[115] Undergraduate, Department of Economics, University of Jaffna.

[116] Senior Lecturer, Department of Economics, University of Jaffna.

## I. ஆய்வின் அறிமுகம்

முதியோர்கள் என்ற பதத்தினை உச்சரிக்கின்ற போது 60 வயதை தாண்டிய ஒருவரையே அது சுட்டி காட்டுகின்றது. முதுமை என்பது உடலில் உள்ள கலங்களிலும் தொகுதிகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டு அவரது தொழிற்பாடுகளில் ஒரு படிப்படியான தேய்வு ஏற்படுகின்ற நிலையே முதுமை என விளங்கிகொள்ளலாம். (வைத்தீஸ்வரன், மூத்தோர் பராமரிப்பு) ஐக்கிய நாடுகள் நிறுவனம் முதியோர் தினத்தினை ஒவ்வொரு மாதமும் 1ம் திகதி கொண்டாடுவதற்கான காரணம் அவர்களது முக்கியத்துவத்தை உணர்த்தவும் அவர்களை இன்றைய தலைமுறையினர் பராமரிக்க வேண்டும் என்பதற்காகும்.

தற்காலத்தில் முதியோர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. இலங்கையின் சராசரி ஆயுட் காலம் 72 ஆண்டுகள் ஆகும்.. இதற்கு மருத்துவ வசதிகளின் கிடைப்பனவு, வாழ்க்கைதர அதிகரிப்பு போன்ற காரணங்களும் அதிகளவு இளைய சமுதாயத்தினர் அழிந்தும் காணமல் போயும் வெளிநாடு சென்றும் இருப்பதுமான போன்ற விசேட காரணங்களும் உள்ளன. இவற்றை விட குடும்ப கட்டுப்பாடுகளும் சிறுவர்களின் தொகையை குறைக்க உதவுகின்றது.

இவ்வகையில் யாழ் மாவட்டத்தில் 125847 முதியோர்கள் வாழ்கின்றார்கள். நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரதேசங்களில் 13.4%ஆன முதியோர்கள் வாழ்கின்றனர். கரவெட்டி பிரதேச செயலகத்தில் 8.9% முதியோர்கள் வாழ்கின்றனர்.˙(மூலம் - மாவட்ட செயலகம்).

முதுமையின்வரைவிலக்கணத்தை நோக்குவோமாயின், தற்போது மேல்நாடுகளில் முதுமையின் வயதை குறிப்பிடுவதற்கு பின்வரும் எல்லை விபரிப்பு காணப்படுகின்றது:

- 60 – 64 வயது - வயதில் மூத்தவர்
- 65 -74 வயது - இளைய முதுமை
- 75 – 85 வயது - நடுத்தர முதுமை
- 85க்கு மேல் மிக முதுமை (சிவயோகன், முதுமை)

இதன்படி கரவெட்டி பிரதேச செயலகத்தில் உள்ள முதியோர்கள் பின்வருமாறு:

- 60 – 64 வயது - 2277 முதியவர்கள்
- 65 -69 வயது -2058 முதியவர்கள்
- 70 – 74 வயது - 1367 முதியவர்கள்
- 75க்கு மேல - 1916 முதியவர்கள்˙ (மூலம் - யாழ் மாவட்ட செயலகம்)

முதியோர் எண்ணிக்கை உலகில் படிப்படியாக அதிகரித்துக் கொண்டு செல்வதன் விளைவாகவும், அவர்களை பராமரிப்பதில் உள்ள பிரச்சனை காரணமாகவும் ஏராளமான முதியோர் இல்லங்கள் இயங்கி வருகின்றன. இதனால் முதியோர் இறப்பு குறைவதன் காரணமாக முதியோரின் பிரச்சனைகள் அதிகமாகி விடுகின்றது.இந்த வகையில் யாழ் மாவட்டத்தில் உள்ள முதியோர் இல்லங்களாக

- கைதடி முதியோர் இல்லம்
- சிவபூமி முதியோர் இல்லம்
- St யோசப் முதியோர் இல்லம்
- St அன்னை திரேசா முதியோர் இல்லம்
- பரமானந்தா முதியோர் இல்லம்
- புத்தூர் மெதடிஸ்த முதியோர் இல்லம்
- அம்மா முதியோர் இல்லம்

போன்ற முதியோர் இல்லங்கள் காணப்படுகின்றன.

இலங்கையில் ஓய்வூதியம் பெறும் வயது 60 ஆக காணப்படுகின்றது இந்த வயதில் தான் பெரும்பாலானவர்களின் பிள்ளைகள் படித்துக் கொண்டிருக்கின்றார்கள். செலவு அதிகம் இதன் காரணமாக இவர்களுக்கு பொருளாதார பிரச்சனைகள் ஏற்படக்கூடியதாக உள்ளது. கூட்டுக் குடும்பங்களில் முதியோரை பராமரிக்கும் பொறுப்பு வீட்டில் உள்ள பெண்களில் தங்கியிருந்தது. தற்போது பெண்கள் தொழிலில் ஈடுபட வெளியே செல்வதனாலும், கூட்டுக்குடும்ப அமைப்பு சிதறிப் போனதாலும் முதியோரை பராமரிப்பதற்கு யாரும் அற்ற நிலை ஏற்பட்டு உள்ளது. அண்மைக்காலத்தில் இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறியதால் முதியோர்கள் தனியாக பராமரிப்பு அற்று விடப்பட்டுள்ளார்கள். வாழ்நாள் நீடிப்பின் காரணமாக அதி முதுமை எய்திய முதியவர்களின் பிள்ளைகளும் முதியவர்களாக உள்ளதால் பெற்றோரை பராமரிக்க முடியாத நிலையும் உண்டாகியுள்ளது. சுகாதார சேவையிலும் குழந்தைகளுக்கும் கர்ப்பவதிகளுக்கு இருப்பது போல் முதியவர்களுக்கு எந்த வித சேவையும் இல்லை அவர்கள் இளைஞர்களுடன் போட்டி போட்டுக் கொண்டு சுகாதார சேவைகளுக்குக் காத்து இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறாக முதியவர்கள் பிரச்சனையை எதிர்கொள்கின்றனர்.

இப்பிரச்சனைகளை தீர்ப்பதற்கான வழிகளாக இளமையில் நோய் ஏற்படாது தடுக்கும் நடவடிக்கைளில் ஈடுபட வேண்டும். அத்துடன் முதுமைப்பருவத்தை அணுகும் காலங்களில் முதுமையை எதிர்கொள்ள ஒவ்வொருவரும் தம்மை தயார் படுத்திக் கொள்ள வேண்டும். 50 வயதில் ஒவ்வொருவரும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் நோய் இருப்பின் உரிய சிகிச்சை அளிக்க வேண்டும். முதியவர்கள் சிறுவர்களுக்கு பொது அறிவினை வழங்குதல் அறிவின் தொடர்ச்சியை நீட்டிக்கும். கடுமையாக வேலை செய்தவர் சடுதியாக ஓய்வு பெறும் போது மனத்தாக்கம் ஏற்படுவது உண்டு இதைத்தவிர்ப்பதற்கு படிப்படியாக ஒய்வு வழங்கப்பட வேண்டும்.

இது தொடர்பான இலக்கியங்கள் அடுத்து முன்வைக்கப்பட்டுள்ளன.

## II. இலக்கிய மீளாய்வு

E.Kahana, B.Kahanȧ(1973-1978) என்ற காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி இது ஓர் நீண்டஆராய்ச்சியாக முதியோர் இல்லத்தில் வாழ்பவர்களையும் வீட்டில் வாழ்பவர்களையும் ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்யப்பட்டது. 228 முதியோர்களை 14 பிரிவுகளாக பிரித்து 1வருடத்தில் 4 தடவை நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது. முதல் இரண்டு கிழமைகளிலும் ஆராய்ச்சியின் படி 3 மாதம் வீடுகளிலும் அதன்பிறகு 7-8 மாதம் இடமாற்றம் செய்யப்பட்டும் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆராய்சியின்படி இடமாற்றம் என்பது ஒரு மனநிலைக்கு பெரும் தேவையாக கருதப்படவில்லை. இந்த ஆராய்சி செய்யப்படும் போது அவர்களது உடல்நிலை திடமாக இருந்தது. ஆனால் சிறிதளவு நபர்களின் உடல்நிலையில் முன்னேற்றம் கூட காணப்பட்டது. இவர்களில் எதிர்பாராத விதமாக 12% மானவர்கள் சமுதாயத்துடன் சேர்ந்து வாழ விரும்புகின்றார்கள்.

E.Midlarsky, E.Kahana(1982-1985). என்ற காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி இது நேரடியாக மற்றவர்களில் இருந்து முதியவர்கள் உதவி பெறுவதை அடிப்படையாக கொண்டது. முன்னைய ஆய்வுகள் இப்படியான நோக்கத்தை கொண்டிருக்கவில்லை. இதில் உதவிகளின் விதங்கள் பிரிக்கப்பட்டு ஆராயப்பட்டது. இதில் குடும்ப விரிவும் அயலவர்களுடன் சொந்தம் கொண்டாடும் விதத்தையும் அடிப்படையாக கொண்டது. இதில் 400 பேரில் 200 பேரை எழுந்தமானமாக தெரிந்தெடுத்து இந்த ஆராய்சி மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவு அவர்களுடைய நோக்கங்கள் எதிர்பார்ப்புக்கள் எதிர்பார்க்கும் உதவிகள் பிரச்சனைகள் அதனால் ஏற்படும் நன்மைகள் தீமைகள் என்பவற்றை அடிப்படையாக கொண்டது. இதில் வாழ்க்கையில் உள்ள பிரச்சனைகளை வெற்றி கொள்ளும் விதம் வாழ்க்கையில் உள்ள நல்ல தருணங்கள் அதில் என்ன காரணிகள் தங்கியுள்ளன. என்பன பற்றிய ஆராய்ச்சியில் அடங்கியுள்ளன.

மதிவதனி எஸ் (2001) என்பவரது ஆய்வில் உலகமானது எதிர்நோக்கும் முக்கியமானள பிரச்சனையாக முதியோர் எண்ணிக்கை அதிகரித்தல் என்பது காணப்படுகின்றது. எனவும் இலங்கையில் ஆண்களின்

எதிர்பார்க்கையானது 70ஆகவும் பெண்களின் ஆயுள் எதிர்பார்க்கை 77 ஆகவும் காணப்படுவதாகவும் இவ்வாறு ஆயுள் எதிர்பார்க்கையானது அதிகரிப்பதனால் முதியோர் எண்ணிக்கையானது நாட்டிலே அதிகரித்துச் செல்வதாகவும் இதனால் முதியோர் பல பிரச்சனையை எதிர்நோக்குவதாகவும் தென்னாசியாவிலே இலங்கையிலே அதிக முதியோர் காணப்படுவதாகவும் 2025 அலும் மேலும் அதிகரிப்பதாகவும் கூறப்படுகின்றது. மேலும் முதியோர்களுக்கு ஏற்படுகின்ற மூப்பும் அதைத் தொடர்ந்து வருகின்ற உடல் நலிவு தள்ளாமை சோர்வு ஆகிய எல்லாம் அவர்களை அனுதாபத்திற்கு உரியவர்களாக ஆக்குகின்றது எனவும் உலகிலே முதியோரை பராமரிப்பதற்கு பல்வேறு நிறுவனங்கள் அமைப்புக்கள் என்பன காணப்படுகின்றது. எனவும் இலங்கையிலும் முதியோர் நலத்திட்டம் என்பது காணப்படுகின்றது. எனினும் இன்று முதியோரை பராமரித்தல் என்பது இளையோரினால் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் காணப்படுகின்றது என்பதனை விபரண மற்றும் புள்ளிவிபர ரீதியில் ஆராய்ந்து உள்ளார்.

ஜெயப்பிரபா (2007) என்பவரது ஆய்வில் முதியோரை பராமரித்தல் என்பது அனைவரினதும் தலையாய கடமை ஆகும். எனவும் தற்காலத்தில் முதியோரின் எண்ணிக்கையானது அதிகரித்து வருவதாகவும் இதன் போது முதியோர் பாதுகாப்பு பராமரிப்பு என்பது அவசியமானதாகும். இலங்கையானது முதியோர் பராமரிப்புக்காக அதிகளவு பணம் செலவிடுவதில்லை எனவும் இந்த வகையில் முதியோர் பிரச்சனை ஓர் குடும்ப பிரச்சனை அல்ல அது ஓர் சமூகப்பிரச்சனை எனவும் எனவே பூரணமான சிறந்த சமூகப்பாதுகாப்பும் சுகாதார வசதிகளும் முதியோர்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் முதியோர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் பராமரிக்கப்பட வேண்டும் என்பதனை பண்பு ரீதியான முறையியே விளக்கி உள்ளார்.

கோசலை. ம (2011) என்பவரது ஆய்வில் முதியோருக்கு எதிராக இழைக்கப்படுகின்ற துஷ்பிரயோகம் தொடர்பாகவும் இதனை தடுப்பதற்காகவே இலங்கையில் முதியோர் பாதுகாப்புச் சட்டமானது கொண்டுவரப்பட்டதாகவும் இச்சட்டத்தின் ஊடாக முதியோர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகள் ஓரளவு கட்டப்படுத்தப்படுவதாகவும் எனினும் முற்றாக முதியோர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளினை இல்லாதொழிக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

சண்முகலிங்கன் (1998) என்பவர் முதுமையடைதல் என்பது பொதுவான ஒரு பரல் மாறுதல் எனவும் அதிகரித்து வரும் முதியோர் பராமரிப்பு இல்லாத தேடல்களும் அதிக பாதிப்புக்கு உள்ளாகும் நிலமைகளும் முதியோர் பிரச்சனையை மேலும் அதிகரிக்கின்றன. அத்தோடு முதுமை அடைந்தமைக்காக ஒதுக்குதலம் பராபட்சம் காட்டுதலும் இன்று அதிகரித்த வண்ணமாக உள்ளன. இதனால் முதியவர்களின் மனநிலையானது பாதிக்கப்பட்டு அவர்கள் உளரீதியான பிரச்சனைகளை எதிர்நோக்குகின்ற தன்மையினைக் காணக்கூடியதாக உள்ளது என்ற கருத்துக்களின் பண்பு ரீதியாக விளக்கிஉள்ளார்.

சிவயோகன் அ சோமசுந்தரம் த (2001) என்பவர்கள் பொதுவாக 65 வயதிற்கு மேற்பட்டவர்களையே முதியவர்கள் என்ற வரையறைக்குள் உட்படுத்துவதாகவும் ஆனால் வருடங்களின் எண்ணிக்கையை மட்டும் வைத்துக் கொண்டு முதுமைப் படிநிலையை எல்லைப்படுத்துவது அவ்வளவு பொருத்தமாகாது எனவும் ஏனெனில் சிலர் மிகச்குறைந்த வருடங்களிலேயே முதுமையின் சுவடுகள் பாதிக்கப்பட்டவர்களாகி விடுகின்றார்கள். எனவும் இதன் அடிப்படையிலேயே ஆரோக்கியமான முதுமை, முதுமை மருத்துவம், முதியோர் உள நோயியல் போன்ற மருத்துவம் சார்ந்த துறைகளின் தோற்றமும் வளர்ச்சியும் இணைந்து கொண்டதாகவும் மேலும் பொதுச்சுகாதார அடிப்படையிலே முதுமைப்பருவமானது பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்குவதாகவும் அதிலே முக்கியமானதாக அவர்கள் அதிர்நோக்குகின்ற உளவியல் ரீதியான பிரச்சனைகளே மிகப்பாரியதாகும் எனவும் விபரண முறையிலே ஆய்வினை மேற்கொண்டார்கள்.

சோமசுந்தரம் .த சிவயோகன் .சா (2004) என்பவரின் நூலில் ஒருவரின் உடலில் உள்ள கலங்களிலும் தொகுதிகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டு அவரது தொழிற்பாடுகளில் ஒரு படிப்படியான தேய்வு ஏற்படுகின்ற நிலையே முதுமை எனவும் தற்காலத்தில் முதியவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாகவும் அதிலும் பராமரிப்பற்ற முதியவர்களின் எண்ணிக்கையே அதிகமாக காணப்படுவதாகவும் அத்துடன்

முதியவர்கள் பல்வேறு உடல் ரீதியான பிரச்சனைகளை எதிர்நோக்குவதாகவும் இதனால் அவர்கள் கூடுதலான பாதிப்பிற்கு உட்படுவதாகவும் இதனால் அவர்களிடையே பல வெளிப்பாடுகள் தென்படுவதாகவும் இதனால் முதியவர்களினை அவர்களுடைய முதுமைக்காலத்திலே பராமரிக்க வேண்டியது பிள்ளைகளின் கடமை எனவும் விபரண முறையிலே விளக்கியுள்ளார்.

வைத்தீஸ்வரன். கா (2007) மனித வாழ்க்கையிலே பல கட்டங்களை தாண்டி மூப்பு நிலையை சந்திக்கின்றோம். எனவும் வயது செல்ல செல்ல ஒருவரின் நோயெதிர்ப்பு சக்தி குறைவடையும் எனவும் முதியோரை பராமரிப்பது என்பது பிள்ளைகளின் கடமை எனவும் இது சமூகத்தின் தேவை எனவும் பிள்ளைகள் வெளிநாடு செல்லுதல் மற்றும் பல்வேறு காரணங்களினால் பெற்றோரை பெற்றோரை பராமரிக்க முடியாத நிலை காணப்படுகிறது எனவும் இதனால் முதியோரான பெற்றோர்கள் பல உடல் மற்றும் உளவியல் ரீதியான பிரச்சனைகளை எதிர்நோக்குவதாகும் எனவே தற்காலத்தில் முதியோர் பராமரிப்பு என்பது முக்கியமான விடயமாக காணப்படுகின்றது என்பதனை விபரண முறையிலே விளக்கிஉள்ளார்.

சுண்முகலிங்கன்(2007) என்பவர் கூட்டுக்குடும்பங்களின் நிலைபேறானது சுருங்க தொடங்கிய போது முதியவர்களின் நிலையும் தளரத்தொடங்கியது எனவும் மேலும் நகரமயமாக்கம் நகரை நோக்கிய அசைவுகளினால் தனித்து விடப்படுகின்றார்கள் எனவும் இவ்வாறு கவனிப்பு அற்ற முதியோர்களை பராமரிப்பதற்காகவே முதியோர் இல்லங்களின் தேவையானது காணப்படுகின்றது. அநாதரவான முதியவர்களுக்கு ஓரளவு ஆறுதல் கொடுப்பனவாகவே முதியோர் இல்லங்கள் காணப்படுகின்றன எனவும் முதியோர் இல்லங்களின் தேவையானது அளப்பரியது எனவும் பண்பு ரீதியாக விளக்கி உள்ளார்.

## III. எழுவினாக்களும் கருதுகோள்களும்

இவ்வாய்வு மேற்குறித்த ஒவ்வொரு காரணிகளும் தனித்தனியேயும் கூட்டாகவும் எவ்வாறு முதியோர் பராமரிப்பினைப் பாதிக்கின்றன என்னும்எழுவினாவையும் பின்வரும் எடுகோள்களையும் கொண்டமைகிறது.

**H1முதியோர் இல்லங்களில் வாழ்கின்ற முதியோர்களின் பராமரிப்பினை விட வீடுகளில் உள்ள முதியோர்களின் பராமரிப்பில் வேறுபாடு உள்ளது.**

**H2பிள்ளைகளின் இடப்பெயர்வு அதிகரிக்கின்ற போது முதியோர் பராமரிப்பு குறைகின்றது.**

**H3முதியோர்களிடம் இருக்கின்ற சொத்துக்களின் அளவு அதிகரிக்கின்ற போது முதியோர் பராமரிப்பு அதிகரிக்கின்றது.**

**H4பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்ற போது முதியோர் பராமரிப்பு அதிகரிக்கின்றது**

**H5பிள்ளைகளின் வருமானம் அதிகரிக்கின்ற போது முதியோர் பராமரிப்பு அதிகரிக்கின்றது**

## IV.ஆய்வு முறையியல்

ஆய்வுப் பிரச்சனையை கண்டறிந்த பின்னர் அது தொடர்பான விடயங்களை சேகரித்து ஒழுங்குமுறையான படிமுறையூடாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையே ஆய்வுமுறையியல் எனப்படும இவ் ஆய்வானது தரவுகள் பண்புகள் அம்சங்களை ஆராய்வதனால் பண்புசார் விபரணஆய்வு பின்பற்றப்படுகின்றது. அந்த வகையில் இவ் ஆய்வானது முதியோர் பராமரிப்பில் தாக்கம் செலுத்தும் காரணிகள் என்பதை ஆராய்வதுடன் அதில் எத்தகைய காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. ஏன்பதை ஆய்வு செய்வதாக அமைகின்றது

இந்நோக்கில்,குடித்தொகை மாதிரி எடுப்பு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது இந்த வகையில் யாழ்ப்பாணத்தில் உள்ள கரவெட்டி பிரதேச செயலகத்தில் உள்ள முதியோர் இல்லங்களில் உள்ள அனைத்து முதியோர்களையும் தமது வீடுகளில் வாழும் முதியோர்களையும் உள்ளடக்கி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.


இவ்வாய்வுக்கான முதலாம் நிலைத்தரவுகளானவை அவதானிப்புக்கள் நேர்காணல், வினாக்கொத்து, நேரடி அவதானிப்புக்கள் மற்றும் கலந்துரையாடல்கள் மூலமும் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. அதாவது


அவதானிப்புக்கள் எனும் போது முதியோா் இல்லம்,வீடுகளிற்கு நேரடியாக சென்று முதியோாா்களிடம் இருந்து தகவல்கள் பெறப்பட்டன. நோ்காணல் ஆனது வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களை விட மேலதிகமாக தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு இத்தரவு சேகரிப்புமுறை முதியோா்களின் விருப்புவெறுப்புக்கள் எதிா்பாா்க்கைகள் பிரச்சனைகளை தெளிவாக அறிந்து கொண்டதோடு முதியோா் இல்ல ஊழியா்களிடமும் நேரடியாக சென்று சில வினாக்கள் மட்டும் கேட்டு தரவுகளாக சேகரிக்கப்பட்டதுடன் ஒழுங்கு படுத்தப்படாத நோ்முக உரையாடல் மூலமும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. அதாவது தீடீரென ஏற்படக்கூடிய கலந்துரையாடல் நிலைகளுக்கு ஏற்ப உடனுக்குடன் வினாக்கள் தொடுக்கப்பட்டு தரவுகள் திரட்டப்பட்டன. இவை மேலதிக தேவைக்காக திரட்டப்பட்டவை ஆகும்.

அடுத்து ஆய்வின் நோக்கங்களை அடையக்கூடிய வகையில் உருவாக்கப்பட்ட கருதுகோளுக்கு ஏற்ப வினாவப்பட வேண்டிய வினாக்களை முற்கூட்டியே தீா்மானம் எடுத்து அவற்றை ஒழுங்கமைத்து வினாக்கள் தயாரிக்கப்படுவதாகும். இவ்வினாக்கொத்து முதியோா் இல்லங்களில் வாழ்கின்ற முதியோா்களுக்கும் வீடுகளில் வாழ்கின்ற முதியோா்களுக்கும் வழங்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டதன் மூலம் தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.இரண்டாம் நிலைத்தரவுகளானவை ஆய்வு தொடா்பான ஆய்வுக்கட்டுரைகள், ஆய்வு தொடா்பான இலக்கியங்கள், முதியோா் இல்ல அறிக்கைகள் பிரதேச சபை புள்ளிவிபரங்கள் போன்றவற்றில் இருந்து தரவுகள் திரட்டப்பட்டு அவை ஒழுங்குபடுத்தப்பட்டு பகுப்பாய்வுக்கு உள்ளடக்கப்பட்டுள்ளது இவ்வகையில் முதியோா் பராமரிப்பில் தாக்கம் செலுத்தும் காரணிகளை கண்டறிவதற்கு பொருத்தமான புள்ளிவிபரங்கள் துணைகொண்டு தரவுகளின் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டன மேலும் பகுப்பாய்வு செய்யப்பட்ட தரவுகளினை சலாகை வரைபடங்கள் பிரிக்கப்பட்ட வட்ட வரைபடங்கள் கோட்டு வரைபடங்கள் போன்றன பயன்படுத்தப்பட்டு விளக்கப்பட்டுள்ளதுடன் முதியோா் இல்லத்தில் வாழுகின்ற முதியோருக்கும் வீடுகளில் வாழுகின்ற முதியோருக்குமான ஒப்பீட்டினை விபரண பகுப்பாய்வு முறை மூலம் விளக்கப்பட்டுள்ளதோடு முதியோா் பராமரிப்பில் தாக்கம் செலுத்தும் காரணிகளான பிள்ளைகளின் வருமானம், பிள்ளைகளின் எண்ணிக்கை, முதியோா்களிடம் இருக்கின்ற சொத்துக்களின் அளவுகள் என்பனவற்றை கணிப்பிட்டு கருதுகோளை நிருபிப்பதற்கு கைவா்த்தன பரிசோதனை முறை பயன்படுத்தப்பட்டுள்ளதோடு பிள்ளைகளின் இடப்பெயா்வினை விளக்குவதற்கு Crosstabulation பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவ் வாய்வில் முதியோா் பராமரிப்பில் தாக்கம் செலுத்தும் காரணிகளில் குறிப்பிட்ட சில மாறிகள் மட்டுமே கருத்தில் கொள்ளப்பட்டன இங்கு முதியோா்களது பராமரிப்பு நிலை சாா் மாறியாகவும் முதியோா் பராமரிப்பில் தாக்கம் செலுத்தும் காரணிகள் சாரா மாறியாகவும் அமைகின்றன. இங்கு இரண்டு வகையான வினாக்கொத்துக்கள் முதியோா் இல்ல முதியோா்களிற்கும் ,வீடுகளில் உள்ள முதியோா்களிற்கும் வழங்கப்பட்டுள்ளதால் இவற்றினை ஒப்பீடு செய்வதற்கு 'கை'வா்க்கபரிசோதனை முறை இலகுவாக உள்ளதால் கைவா்த்தன பரிசோதனை முறை பயன்படுத்தப்பட்டுள்ளது். அத்துடன் SPSS மற்றும் Excel ஆகிய மென்பொருள் நுட்ப முறைகளை பயன்படுத்திதரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன

உரு 1: எண்ணக்கரு சட்டவாக்கம்



**V.முடிவுகள்**

**விபரண ரீதியான தரவுப்பகுப்பாய்வின் முடிவு**

கருதுகோள் 1

இதனை பரிசீலனை செய்யும் போது முதியோா் இல்லத்தில் வாழுகின்ற முதியோா்களின் பராமரிப்பு நிலைக்கும் தமது வீடுகளில் வாழுகின்ற முதியோா்களது பராமரிப்பு நிலைக்கும் இடையில் வேறுபாடு உள்ளது என்பதை நிரூபிக்க முடிகின்றது. அதாவது பால் நிலை, விவாகஅந்தஸ்து, உறவினா்களுடன் தொடா்புகளை பேணல் உணவு, உடை, பொழுதுபோக்கு, சுகநலன், கழிவகற்றல், சமூகத்தில் பங்கு பற்றல, பொருளாதாரம் ஆகியவற்றில் முதியோா் இல்லங்களில் வாழுகின்ற முதியவா்களுக்கும் தமது வீடுகளில் வாழும் முதியவா்களுக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றது என்பதனை சுட்டிகாட்ட முடிகின்றது. ஆய்வின் முடிவுகளின் படி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட முதியோா் இல்லங்களில் உள்ள முதியவா்களின் பராமரிப்பு நிலைக்கும் தமது வீடுகளில் வாழுகின்ற முதியோா்களின் பராமரிப்பு நிலைக்கும் இடையில் வேறுபாடு உள்ளதை அதாவது வீடுகளில் வாழ்கின்ற முதியவா்கள் எல்லா வசதிகளுடனும் வாழ்கின்றனா் ஆனால் முதியோா் இல்லங்களில் வாழ்கின்ற முதியவா்களுக்கு எல்லா வசதிகளும் கிடைக்கப்பெற்றாலும் அவா்கள் மன விரக்தியில் வாழ்வதனை நோ்காணல் மூலம் அறிய முடிந்தது. ஆகவே இவ் ஆய்வின் முடிவாக முதியோா் இல்லங்களில் வாழும் முதியவா்களின் பராமரிப்பு நிலைக்கும் வீடுகளில் வாழும் முதியவா்களின் பராமரிப்பு நிலைக்கும் இடையில் வேறுபாடு உள்ளது என்பதை ஆய்வின் முடிவுகள் வெளிப்படுத்துகின்றன.

கருதுகோள்2

**முதியோா்களிடம் இருக்கின்ற சொத்துக்களின் அளவு அதிகரிக்கின்ற போது முதியோா் பராமரிப்பு அதிகரிக்கின்றது.**

இங்கு அட்டவணை பெறுமானம் 12.53 ஆகவும் உள்ள போது கைவா்க்க கணிப்பிடப்பட்ட பெறுமானம் $X^2$= 33.11762 ஆக அமைவதால் அதாவது நிராகரிக்கும் பிரதேசத்திற்குள் (Critical Region) அதாவது rejecting region க்குள் விழுகின்றது. எனவே சூனிய கருதுகோளானது (Ho) நிராகரிக்கப்படுகின்றது. எனவே முதியோா் பராமரிப்பு நிலைக்கும் முதியோாின் சொத்து மட்டத்திற்கும் இடையே தொடா்பு உண்டு என்ற மாற்றுக்கருதுகோளானது (H1) ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

ஆகவே சொத்து மட்டம் அதிகமாக உள்ள முதியோா்களை விட சொத்து மட்டம் குறைவாக இருக்கின்ற முதியவா்கள் முதியோா் இல்லங்களிற்கு செல்கின்றனா் என்பது இதிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது. இதிலிருந்து பொதுவாக முதியவா்களின் சொத்து மட்டத்திற்கும் முதியவா்களின் பராமரிப்பு நிலைக்கும் இடையே நெருக்கமான தொடா்பு உள்ளது என கூறமுடியும்.

ஆகவே கூடிய சொத்து நிலை முதியோா்களை முதியோா்கள் வீடுகளில் வாழ்வதற்கு பங்களித்து சொத்து நிலமை முதியோா்களை பராமரிக்க தூண்டுதலாக உள்ளது. இவ்வகையில் முதியோா்களின் சொத்துநிலைக்கும் முதியோா்களது பராமரிப்புக்கும் இடையே நோ்கணிய தொடா்பு கொண்டுள்ளமை இந்த ஆய்வின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது

கருதுகோள் 3

**பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்ற போது முதியோா் பராமரிப்பு அதிகரிக்கின்றது.**

இங்கு அட்டவணை பெறுமானம் 7.815 ஆகவும் உள்ள போது கைவா்க்க கணிப்பிடப்பட்ட பெறுமானம் $X^2$= 14.1162 ஆக அமைவதால் அதாவது நிராகரிக்கும் பிரதேசத்திற்குள் (Critical Region) அதாவது rejecting region க்குள் விழுகின்றது. எனவே சூனிய கருதுகோளானது (Ho) நிராகரிக்கப்படுகின்றது. எனவே முதியோா் பராமரிப்பு நிலைக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் இடையே தொடா்பு உண்டு என்ற மாற்றுக்கருதுகோளானது (H1) ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

ஆகவே பிள்ளைகள் அதிகமாக உள்ள முதியோர்களை விட பிள்ளைகள் குறைவாக இருக்கின்ற முதியவர்கள் முதியோர் இல்லங்களிற்கு செல்கின்றனர். ஏன்பது இதிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது. இதிலிருந்து பொதுவாக முதியவர்களின் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் முதியவர்களின் பராமரிப்பு நிலைக்கும் இடையே நெருக்கமான தொடர்பு உள்ளது என கூறமுடியும்.

ஆகவே பிள்ளைகள் கூடிய முதியோர்கள் வீடுகளில் வாழ்வதற்கு பங்களித்து பிள்ளைகளின் எண்ணிக்கை முதியோர்களை பராமரிக்க தூண்டுதலாக உள்ளது. இவ்வகையில் முதியோர்களின் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் முதியோர்களது பராமரிப்புக்கும் இடையே நேர்கணிய தொடர்பு கொண்டுள்ளமை இந்த ஆய்வின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது

கருதுகோள் 4

**பிள்ளைகளின் வருமானம் அதிகரிக்கின்ற போது முதியோர் பராமரிப்பு அதிகரிக்கின்றது.**இங்கு அட்டவணை பெறுமானம் 9.488 ஆகவும் உள்ள போது கைவர்க்க கணிப்பிடப்பட்ட பெறுமானம் $X^2$= 11.6666 ஆக அமைவதால் அதாவது நிராகரிக்கும் பிரதேசத்திற்குள் (Critical Region) அதாவது rejecting region க்குள் விழுகின்றது. எனவே சூனிய கருதுகோளானது (Ho) நிராகரிக்கப்படுகின்றது. எனவே முதியோர் பராமரிப்பு நிலைக்கும் பிள்ளைகளின் வருமானத்திற்கும் இடையே தொடர்பு உண்டு என்ற மாற்றுக்கருதுகோளானது (H1) ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

ஆகவே பிள்ளைகள் வருமானம் குறைவாக இருக்கின்ற முதியவர்கள் முதியோர் இல்லங்களிற்கு செல்கின்றனர். என்பது இதிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது. இதிலிருந்து பொதுவாக முதியவர்களின் பிள்ளைகளின் வருமானத்துக்கும் ˙ முதியவர்களின் பராமரிப்பு நிலைக்கும் இடையே நெருக்கமான தொடர்பு உள்ளது என கூறமுடியும்.

ஆகவே பிள்ளைகளினது வருமானம் கூடிய முதியோர்கள் வீடுகளில் வாழ்வதற்கு பங்களித்து பிள்ளைகளின் வருமானம் முதியோர்களை பராமரிக்க தூண்டுதலாக உள்ளது. இவ்வகையில் முதியோர்களின் பிள்ளைகளின் வருமானத்துக்கும் முதியோர்களது பராமரிப்புக்கும் இடையே நேர்கணிய தொடர்பு கொண்டுள்ளமை இந்த ஆய்வின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

**Cross trabulation பரிசோதனையின் முடிவு**

கருதுகோள்5 முதியோர் இல்லங்களில் வாழுகின்ற முதியவர்களின் பிள்ளைகள் கூடுதலாக இடப்பெயர்வினை மேற்கொண்டுள்ளார்கள் இதனால் முதியோர்களிடையே பராமரிப்பு குறைவாக காணப்படுகின்றது இதனால் முதியோர் இல்லத்திற்கு செல்கின்றனர் ஆனால் தமது வீடுகளில் வாழுகின்ற முதியவர்களின் பிள்ளைகள் அவர்களுடனே வாழ்கின்றனர் இதனால் பராமரிப்பு கூடுதலாக காணப்படுகின்றது. ஆகவே முதியோர்கள் தமது வீடுகளில் வாழ்கின்றனர் ஆகவே பிள்ளைகளின் இடப்பெயர்வு அதிகரிக்கின்ற போது முதியோர் பராமரிப்பு குறைகின்றதுஅதாவது பிள்ளைகளின் இடப்பெயர்வுக்கும் முதியோர் பராமரிப்புக்கும் இடையில் எதிர்கணிய தொடர்பு காணப்படுகின்றது என்ற கருதுகோளானது ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**VI பரிந்துரைகள்**

1. முதியோர்கள் முதுமை அடைவதை அபிவிருத்திக் கொள்கையினுள் சேர்த்துக் கொள்வதும், முதியோர்களின் முழுமையான ஒருமைப்பாடு பங்கு கோடல்களை மேம்படுத்தலும்
2. முதியோர்கள் பற்றி வயது வந்த ஆட்கள் நோக்கில் உறுதியான உளப்பாங்கு தொடர்பில் விழிப்புணர்வை உருவாக்குதல்.
3. முதியோர்களுக்கு பொருத்தமான கல்வி பயிற்சி ஆகியவற்றுக்கு வாய்ப்பு வழங்குதல்.
4. சமூக நலனோம்பலையும், பாதுகாப்பையும் வழங்குதல்
5. வருமான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் பொருத்தமான தொழில் வாய்ப்பையும் உயர்த்துதல்.

6. மூப்படைதலில் பால் குறித்த விடயங்களை உறுதிப்படுத்தல்.
7. வயோதிப வயதில் ஆரோக்கிய நிலை,சேமநிலை, மிகுதிப்படுதல், சுகாதாரம்,போசனை, பொழுதுபோக்கு ஆகியவற்றை உறுதிப்படுத்தல
8. அறிவுரை கூறல் சேவைகள்
9. பொருத்தமான வீடமைப்பு, போக்குவரத்து, வாழ்க்கைச் சூழலை மேம்படுத்துதல்
10. பெற்றோர்கள் மற்றும் முதியோர்களை கவனிப்பதற்கு குடும்ப கூறுகளைப் பலப்படுத்தல்.
11. சட்ட பாதுகாப்பு வழங்குதல்.
12. நுகர்வோர் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
13. கலாச்சார ஆன்மீக தேவைகளுக்கு உதவுதல்
14. செயற்படுத்தல் தொடர் நடவடிக்கை எடுத்தல் அமைப்பு ஒன்றை விருத்தி செய்தல்

## VII. உசாத்துணை நூல்கள்


1. அல்வராஜ்.Y.M, அப்துல் காதர். J.P, (2007) ,"முதியோரும் உளவியல் பிரச்சனைகளும்", மெட்டுக்கள்-02.
2. கோகிலா.ம, (2002)," முதுமையின் சவால்களும் வரப்பிரசாதங்களும்", முதுசம் சமூக நலத்துறைத்திணைக்களம், வடமாகாணம்.
3. குகபாலன்.க, (1998),"முதியோர் வாழ்வ கைதடி சாந்தி நிலையத்தை மையமாகக் கொண்ட ஆய்வு"இ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
4. சண்முகலிங்கன்.எஸ், (2004),"மரபுகளும் மாற்றங்களும்", நாகலிங்கம் நூலகம், யாழ்ப்பாணம்.
5. சண்முகலிங்கன்.எஸ், (2007),"சமூக மாற்றத்தில் பண்பாடு", வசந்தம் புத்தக நிலையம், 404 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
6. சிவசுப்பிரமணியம்.த, (2005)இ "சவால்களை எதிர்கொள்ளலும் முதியோரை பராமரித்தலும்", முதுசொம் சமூக நலத்துறைத்திணைக்களம், வடமாகாணம்.
7. சிவத்தம்பி.கா, (2006)இ "தமிழ் மரபில் முதுமை", முதுசம் சமூக நலத்துறைத்திணைக்களம், வடமாகாணம்.
8. விசாக ரூபன், (2007)இ "தமிழ்ப் பண்பாட்டில் முதியோரை பேணும் சமூக மதிப்பு மரபும் மாற்றமும்" முதுசொம் சமூக நலத்துறைத்திணைக்களம், வடமாகாணம்.
9. யோதிலிங்கம்.வி.அ, (2007) "முதியோர் உரிமை சட்டமும் பாதுகாப்பும்", முதுசம் சமூக நலத்துறைத்திணைக்களம், வடமாகாணம்.
10. Deiming.G, (2003), "Quality of life of older Adult Long – term center survivors", the elderly care Research center